அரசு தானியங்கி பணிமனையின் உபரித் தொகுப்பிலிருந்து, ஊர்தி எண்.TN 10 G 9000 AMB A/C, ஊரக வளர்ச்சி இயக்குநர் அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்ய அனுமதித்தல்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி.4) துறை

**அரசாணை** (நிலை) எண். 21 நாள்: 25.1.2008.

படிக்கப்பட்டவை:

1. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் இயக்குநர் கடிதம் எண்.33063/ 07/ பொது 3.1 நாள் 19.9.07.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் கடிதம் எண்.33063/2007/பொது 3.1, நாள் 4.1.2008.

**ஆணை**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் இயக்குநர் அவர்கள் அரசிற்கு எழுதியுள்ள கடிதத்தில், ஊரக வளர்ச்சி இயக்ககம் ஊர்தி எண். TN 04 2626 கழிவு நீக்கம் செய்யப்பட்டுவிட்டது என்றும் அதற்குப் பதிலாக அரசு தானியங்கி பணிமனையின் (MVMO) உபரி தொகுப்பில் உள்ள ஊர்தி எண். TN 10 G 9000 AMB A/C கோரப்பட்டது என்றும் மோட்டார் வாகன பராமரிப்பு துறை இயக்குநரும் இவ்வாகனத்தை ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு ஒதுக்கீடு செய்ய பரிந்துரைத்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளார். ஆகவே மோட்டார் வாகன பராமரிப்பு துறையின் கீழ் இயங்கும் மத்திய தானியங்கி பணிமனையின் உபரி தொகுப்பில் உள்ள ஊர்தி எண். TN 10 G 9000 AMB A/C ஐ ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பிக்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் இயக்குநர் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும், ஏற்கனவே TN 04 2626 வாகனத்திற்கு மோட்டார் வாகன பராமரிப்புத் துறையினரால் வழங்கப்பட்டுள்ள எரிபொருளினையே TN 10G 9000-க்கு மாற்றி வழங்க ஆணை பிறப்பிக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. கவனமான பரிசீலனைக்குப்பின் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அனுப்பியுள்ள செயற்குறிப்பினை ஏற்று, அரசு தானியங்கி பணிமனையின் உபரித் தொகுப்பில் உள்ள ஊர்தி எண். TN 10 G 9000 AMB A/C சீருந்தினை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருக்கு ஒதுக்கீடு செய்யவும் மற்றும் ஏற்கனவே TN 04 2626 வாகனத்திற்கு மோட்டார் வாகன பராமரிப்புத் துறையால் வழங்கப்பட்டுள்ள எரிபொருளையே TN 10G 9000 – க்கு மாற்றி வழங்கவும் அரசு ஆணையிடுகிறது.

3. இவ்வாணை நிதித்துறையின் இசைவுடன், அ.சா.எண்.72305/ஊரக வளர்ச்சி/07, நாள் 5.12.07, வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க.அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசு செயலாளர்.